**In the Fast Track Court (Magisterial Level) at Kovilpatti.**

**Dated:21.01.2025**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

**C.C .No.**34/2019

**Witness- D.W-1**

Name : பாலமுருகன் த/பெ வேலுச்சாமி
Address : 94/ கிழக்கு தெரு, சங்கரலிங்கபுரம்,கோவில்பட்டி

**(Witness has been administered Oath U/s 3 of the Oaths Act 1969)**

(1969 ம் ஆண்டு ஆணைமொழிச் சட்டத்தின்படியும், 1872 ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம், அத்தியாயம் 10 மற்றும் குற்றவியல் நடைமுறை விதி 36 ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது)

**முதல் விசாரணை:**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். 2017 ல் விக்னேஸ்வரன் என்பவரின் ஓட்டலில் வேலை பார்த்து வந்து தற்போது ஓர்க்ஸ்ஷாப்பில் பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் புகார்தாரர் வீரபாண்டியன் என்பவரை எனக்கு தெரியும். அவர் சிட்டை வட்டிக்கு கொடுத்து வாங்கி வருகிறார். பொதுவாக கடையில் பணிபுரிந்துவரக்கூடிய நபர்களுக்கு இதுபோன்று வட்டிக்கு பணம் கொடுப்பார். அதைப்போல் நான் 2017 ல் பணிபுரிந்து வந்த ஒட்டலுக்கும் வந்திருக்கிறார். அந்த ஓட்டலில் பணிபுரிந்து வந்த நபர்களுக்கு வட்டிக்குபணம் கொடுத்தார். அதைப்போல் நானும் வட்டிக்கு கடன் அவரிடமிருந்து வாங்கியுள்ளேன்

**குறுக்கு விசாரணை**

**புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken before me in open court, read over to the
witness and admitted by the deponent to be Correct.

Sd/-Thiru.K.Baskar
Judicial Magistrate,
Fast Track Court(Magisterial Level), Kovilpatti.

**In the Fast Track Court (Magisterial Level) at Kovilpatti.**

**Dated:21.01.2025**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

**C.C .No.34/2019**

**Witness- D.W-2**

Name : **வினோத் குமார் த/பெ சுந்தர்**
Address : புதுக்கிராமம், கோவில்பட்டி

**(Witness has been administered Oath U/s 3 of the Oaths Act 1969)**

(1969 ம் ஆண்டு ஆணைமொழிச் சட்டத்தின்படியும், 1872 ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம், அத்தியாயம் 10 மற்றும் குற்றவியல் நடைமுறை விதி 36 ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது)

**முதல் விசாரணை:**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு ஆஜர் புகார்தாரர் மற்றும் எதிரியை தெரியும். எதிரியின் மகன் பெயர் விக்னேஸ் . இந்த விக்னேஸ், அபூர்வா என்ற ஒட்டலை நடத்திவந்தார். அந்த ஒட்டலில் நான் சப்ளையராக 2016 ல் பணிபுரிந்து வந்தேன். ஆஜர் புகார்தாரர் இந்த ஒட்டலுக்கு வருவார். இந்த ஒட்டலில் வேலை பார்க்கக்கூடிய நபர்கள் புகார்தாரரிடமிருந்து சிட்டையின் அடிப்படையில் வட்டிக்கு பணம் வாங்குவார்கள். அதைப்போல் நானும் கடன் வாங்கியுள்ளேன். மேற்படி ஒட்டலில் 2016 முதல் 2019 வரை வேலைபார்த்தேன்.

**குறுக்கு விசாரணை**

**புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken before me in open court, read over to the witness and admitted by the deponent to be Correct.

Sd/-Thiru.K.Baskar
Judicial Magistrate,
Fast Track Court(Magisterial Level),
Kovilpatti.